மீன்துறை இயக்குநர் அலுவலகம்
நந்தனம், சென்னை–35.

மே.கு.எண்.7281/எம்5/2017

நாள். 16.07.2020.

அரசாணை (3டி) எண்.06, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்2) துறை நாள். 06.06.2020 இத்துடன் இணைத்து வழங்கப்படுகிறது.

21/7/2020

மீன்துறை இயக்குநருக்காக

பெறுநர்
திரு.சே.மணிவண்ணன், இளநிலை உதவியாளர், தலைமையலுவலகம்.

நகல்.
எம் பிரிவு கண்காணிப்பாளர், தலைமையலுவலகம்.
எம்6 பிரிவு உதவியாளர், தலைமையலுவலகம்.
எம்5 இருப்பு கோப்பு / எஸ் பிரிவு.

பெறப்பட்டது
11 JUN 2020

NS

10898

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – மீன்துறை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. சே. மணிவண்ணன் என்பவரது பணியினை வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் (மற்றும்) மீன்வளத் (மீன்–2) துறை

அரசாணை (3டி) எண்.06 நாள் 06.06..2020

திருவள்ளுவர் ஆண்டு 2051,

வைகாசி, 24

படிக்கப்பட்டது

1. மீன்துறை இயக்குநரின் கடித ந.க.எண்.7281/எம்.5/2017, நாள் 10.01.2019.
2. அரசாணை (நிலை) எண்.100, ப(ம) நி.சீ துறை, நாள் 01.08.2018.

-------

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கன்னியாகுமரி (மண்டலம்) மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு. கி.சேரன் என்பவர் 20.12.2016 அன்று பணியிடை மரணமடைந்தார் என்றும் அவரது மனைவி திருமதி. கே. பாக்கியலட்சுமி என்பவர் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வடசேரி மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் தனது 13.06.2017 நாளிட்ட விண்ணப்பத்தில் இறந்த அரசு ஊழியரின் மகனான திரு. சே.மணிவண்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும், திரு. சே.மணிவண்ணன் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது கல்விச் சான்றிதழின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டுள்ளது என்றும் அவரது பிறந்த நாள் 08.01.1992 ஆகும் என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் அவரது வயது 24 என்றும், காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை என்பதால், அவரது குடும்பம் வறிய நிலையில் தான் உள்ளது என கடலூர் வருவாய் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றும் மீன்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். எனவே, காலஞ்சென்ற அரசுப் பணியாளர் கி. சேரன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு. சே.மணிவண்ணன் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் தற்காலிகமாக 26.09.2018 முற்பகல் முதல் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும், பணி நியமன நாளில் அவரது வயது 26 ஆண்டுகள், 08 மாதம் ஆகும் என்றும் தெரிவித்து, கருணை அடிப்படையில் மீன்துறை அமைச்சுப் பணியில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட திரு. சே.மணிவண்ணன் அவர்களின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 26.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மீன்துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிகளை வரன்முறை செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே பத்தி 1–இல் உள்ள மீன்துறை இயக்குநரின் கருத்துருவை நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியில் 26.09.2018 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. சே.மணிவண்ணன் என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 26.09.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. திரு. சே.மணிவண்ணன் இளநிலை உதவியாளரின் பணியானது அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 26.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண். 2832/க்யூ.1/2020, நாள் 26.05.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் அ.சா.எண்.13040/ஜி2/2020–1, நாள் 03.06.2020–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

மீன்துறை இயக்குநர், சென்னை –35.
திரு. சே. மணிவண்ணன், இளநிலை உதவியாளர்
(மீன்துறை இயக்குநர் மூலமாக)

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–9
இருப்பு கோப்பு / உதரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

S. Thiru[illegible] 6/6/2020
பிரிவு அலுவலர்